சீதாவக பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சீதாவக பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைககளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) ஆம் உபபிரிவுடன்8 சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சீதாவக பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.26 ஆம் பந்திக்கு முரணாக 06 மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட ரூபா 88,687,301 ஆன நிலையான வைப்புக்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டிற்கான ஆரம்ப காசும் காசுக்குச் சமமான வைகளிலும் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக அதற்கு சமமான பெறுமதியால் ஆண்டின் ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 10,226,982 மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வைப்புக் கணக்கில் முதலீடு செய்த ரூபா 18,512,095 காசுப்	-மேற்படி-	-மேற்படி-

	பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல்களாக உள்ளடக்கப்படாமையின் காரணமாக முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 28,739,077 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.		
(இ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.31 ஆம் பந்திக்கு முரணாக காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் 03 விடயங்களின் மொத்தம் ரூபா 99,602,282 இனை செம்மையாக்குவதற்குப் பதிலாக ரூபா 5,035,107 செம்மையாக்கப்பட்டிருந்ததனால் ரூபா 104,637,389 பெறுமதியால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் 6.13 ஆம் பந்திக்கு முரணாக சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தல்களின் கீழான 3.5 ஆம் பந்திக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியை பொருட்படுத்தாது அந்த ஆண்டின் போது பெறுமானத் தேய்வு செய்யாததுடன் நீக்கப்படுகின்ற ஆண்டில் முழு ஆண்டிற்காகவும் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூறுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(உ)	நியமத்தின் 9 ஆம் அத்தியாயத்தின் 9.9 ஆம் பந்தீன் பிரகாரம் மூலதனச் சொத்துக்களுக்காக அரசாங்கத்தால் செய்யப்பட்ட ஒப்படைப்புக்கள், மிகை/ பற்றாக்குறையில்	-மேற்படி-	-மேற்படி-

	அடையாளங்காணப்பட்ட மூலதனச் செலவு மானியமாக ஏனைய விபரமான வருமானத்தில் காட்டப்பட்ட வேண்டியதுடன் அவ்வாறு ஏனைய விபரமான வருமானத்தில் காட்டப்பட்ட வேண்டியிருந்த ரூபா 7,054,214 ஆனது ரூபா 70,542,145 ஆகக் காட்டப்பட்டிருந்தது.		
(ஊ)	2024 ஆம் ஆண்டிற்காக விளம்பரப் பலகை தொடர்பான மீளாய்வு ஆண்டின் தொடக்கத்தில் நடாத்தப்பட வேண்டிய போதிலும் சபையினால் அவ்வாறு செய்யப்படாதிருந்ததனால் நியமத்தின் 10 ஆம் அத்தியாயத்தின் 10(2) மற்றும் 10(3) ஆம் பந்திகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய விளம்பர பலகை வருமானங்களின் உட்பாய்ச்சலினை கணக்கீடு செய்ய முடியாதிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்கான விளம்பர பலகை மீளாய்வு தற்பொழுது மேற்கொண்டு முடிவடைந்துள்ளது.	ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலேயே மீளாய்வினை நடாத்தி விளம்பர பலகை வருமானத்தை அடையாளங் காணுதல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14 விடயங்களுக்குரிய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் இயலளவுப் பெறுமதி ரூபா 873,289,378 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் இயலளவுப் பெறுமதியான ரூபா 735,694,922 மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான பெறுமதியாக காட்டப்பட்டதன் காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 137,594,456 குறைத்து காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுககளை தயாரிக்கும் போது சரிசெய்து கணக்கீடு செய்யப்படும்.	சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் கடன்பட்டோர் பதிவழித்தல் ரூபா 2,252,792 தொகையானது ஆண்டிற்கான செலவாகக் காட்டப்படாது திரண்ட நிதியத்திற்கு வரவு	2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுககளை தயாரிக்கும் போது சரியாக வெளிப்படுத்தி கணக்கீடு செய்வதற்கு	சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

	வைத்ததன் காரணமாக ஆண்டிற்கான மிகை அத்தொகையால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.	நடவடிக்கை எடுக்கப்படும்.	
(இ)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த ரூபா 2,503,684 ஆன அலுவலக உபகரணங்கள் கணனி கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டதன் காரணமாக அலுவலக உபகரணங்கள் அத்தொகையால் குறைத்தும் கணனி அப்பெறுமதியால் மிகைத்தும் காட்டப்பட்டிருந்தது.	ரூபா 2,503,684 ஆன அலுவலக உபகரண்ங்களை கணனி கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டமை சரி செய்யப்படும்	சொத்துக்கள் சரியான வகைப்படுத்தலின் கீழ் அடையாளம் கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த ரூபா 419,286 தொகையான அலுவலக உபகரணங்களை பானைகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்ததன் காரணமாக அலுவலக உபகரணங்கள் மேற்கூறிய பெறுமதியால் குறைத்தும் பாவனைகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுககளை தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்யப்படும.	சொத்துக்கள் சரியான வகைப்படுத்தலின் கீழ் அடையாளம் கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு ரூபா 33,308,215 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 28,573,857 ஆக காட்டப்பட்டிருந்ததனால் மிகை ரூபா 4,734,358 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுககளை தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்யப்படும்.	ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்வு சரியாக கணித்து கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டில் 07 வருமான விடயங்களுக்குரிய வருடாந்த விலைப்பட்டியலிடல் மொத்தமாக ரூபா 49,823,817 கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பணமாக கிடைத்த மொத்தமாக ரூபா 47,290,253 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கான மிகை ரூபா 2,533,564 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருநதது.	-மேற்படி-	வருமானங்களை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.
(எ)	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 9.9 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதனச்	-மேற்படி-	நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும்.

	செலவுகளுக்காக அரசாங்கத்தினால் செய்யப்படுகின்ற ஒப்படைப்புக்கள் தொடக்கத்தில் ஏனைய விபரமான வருமானத்தில் ரூபா 121,500,918 ஆக காட்டப்பட வேண்டிய போதிலும் சபையினால் ஆண்டில் கிடைத்த மூலதன மானியம் ரூபா 70,542,145 ஏனைய விபரமான வருமானத்தின் கீழ் காட்டப்பட்டதன் காரணமாக ரூபா 50,958,773 ஆல் ஏனைய விபரமான வருமானம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.		
(ஏ)	விபரமான வருமான கூற்றில் மீண்டுவருபவையற்ற சொத்துக்களுக்காக அரசாங்கத்தினால் செய்யப்பட்ட மாற்றல்களாக ரூபா 12,722,381 இற்குப் பதிலாக ஆண்டில் கிடைத்த மூலதன மானியம் ரூபா 70,542,145 காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 57,819,764 ஆல் வருமானம அதகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்யப்படும்.	நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.
(ஐ)	ஏனைய விபரமான வருமானங்களின் கீழ் காட்டப்பட்ட ஆண்டில் கிடைத்த மூலதன செலவு மானியம் ரூபா 121,500,918 மற்றும் மிகையில்/ பற்றாக்குறையில் காட்டப்பட்ட மூலதனச் செலவு மானியம் ரூபா 12,722,381 உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக தேறிய சொத்துக்கள் ரூபா 108,778,537 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	-மேற்படி-	நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிப்படுதல் வேண்டும்.
(ஒ)	பொது ஆதனங்களுக்கான சேதம் ரூபா 31,105 மற்றும் சேவைக் கட்டணத்திற்கான (கழிவுப் பொருட்களை அகற்றுதல்) ரூபா 632,160 இனை வருமானமாக கருதி கணக்கீடு செய்யததன் காரணமாக மிகை ரூபா 663,265 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கீட்டு குறைபாடுகளை தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானத்தை சரியாக அடையாளங்காண வேண்டும்.
(ஓ)	நூல் நிலைய அங்கத்துவ கட்டணம் ரூபா 116,452 மற்றும்	-மேற்படி-	-மேற்படி-

கற்கை நெறி கட்டணம் ரூபா 1,321,000 அதற்குரிய பேரேட்டுக் கணக்குகளிலிருந்து விபரமான வருமானக் கூற்றில் வருமானமாக கொண்டுவராததன் காரணமாக மிகை ரூபா 1,437,452 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

1.6.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சபையின் முழு உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்களின் மொத்தம் ரூபா 1,433,002,307 ஆனதுடன் பட்டோலைகளின் பிரகாரம் மொத்தம் ரூபா 883,860,389 ஆக இருந்ததனால் ரூபா 549,141,918 வித்தியாசமாகும்.	பதில் வழங்கப்படவில்லை.	கணக்கிணக்கமின்மையைய அடையாளங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 78(1) ஆம் பிரிவு	கொஸ்கம பொதுச் சந்தை காணியில் வெற்றிலை எச்சில் துப்புதலினைப் போல சுகாதார நடவடிக்கைகளுக்காக அதற்கு அருகாமையில் உள்ள பிரதேசங்கள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக அதிக துர்நாற்றம் காணப்பட்டது. அவ்வாறே சந்தைக்கு பின்பக்கமாக துண்டுக்கல் பரப்பப்பட்டுள்ள பகுதி மிகவும் அசுத்தமான நிலையில் காணப்படுவதுடன் அதில் இருக்கின்ற வடிகாண் முறைமையை மூடியுள்ள கம்பி பிலேட் துருப்பிடித்து உக்கி உடைந்திருந்ததன்	பதில் வழங்கப்படவில்லை.	பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தி: றகு இணங்க

		காரணமாக ஆபத்தான நிலையில் காணப்பட்டது.'		
(ஆ)	2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 2017/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 2(i) ஆம் பந்தி	கொடிகாவத்தை பிரதேச சபையிடமிருந்து கிடைத்த ஒரு கெப் வாகனம் சபையின் பெயரில் இதுவரை பொறுப்பேற்கப்பட்டிருக்க வில்லை	பதில் வழங்கப்படவில்லை.	திறைசேரி சுற்றறிக்கையின் சபையின் பெயரில் பொறுப்பேற்பதற் கு பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை திடடங்கள் சுற்றறிக்கை	உளூராட்சி நிறுவனங்களல் நகர அபிவிருத்திக்காக பேணப்படுகின்ற வங்கி கணக்கில் போதியளவு பணம் ஒன்று சேர்கையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அடையாளங்காணப்பட்ட செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தக்கூடியதாக இருந்த போதிலும் வங்கி கணக்கில் காணப்பட்ட ரூபா 18,512,095 தொகை அவ்வாறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவி ல்லை.	பதில் வழங்கப்படவில்லை.	நகர அபிவிருத்தி அதிகாரச சபையின் திட்டமிடல் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2020 திசெம்பர் 03 ஆந் திகதிய 13/2016(i) ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5 மற்றும் 6 ஆம் பந்திகள்	குத்தகைக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு கட்டிடத்திற்குமுரிய உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒவ்வொரு 03 ஆண்டுகளுக்கு ஒரு தடவை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஹங்கெல்ல உப அலுவலகத்தின் 99 கடைகளுக்கு மத்தியில் 82 கடைகளும் பாதுக்கை உப அலுவலகத்தின் 59 கடைகளுக்கு மத்தியில் 05 கடைகளும் அவ்வாறு உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	-மேற்படி-	சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கைக ளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 164,136,809 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 14,928,217 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான˙ மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	˙பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை
		ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
(i)	வீத வரியும் வரியும்	36,233	25,267	21,559	3,708	41,157	22,143	13,683	8,460
(ii)	வாடகை	36,346	33,246	32,003	1,243	39,472	30,872	30,034	838
(iii)	அனுமதிப்பத்திர கட்டணம்	4,238	3,594	3,594	0	4,098	3,747	3,669	78
(iv)	ஏனைய வருமானம்	315,429	136,660	136,600	60	286,574	268,567	268,567	0
	மொத்தம்	392,246	198,767	193,756	5,011	371,301	325,329	315,953	9,376

2.2.2 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 315,953,099 வருமானத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 193,756,033 வரை ரூபா 122,197,066 ஆல் குறைவடைந்திருந்தது.	2024 ஆம் ஆண்டின் போது பட்டியலிடப்படாத வருமானம் உள்ளடக்கப்படாது ரூபா 136,660 ஆக பட்டியலிடப்பட்ட வருமானம் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளது.	வருமானங்களை பட்டியலிடுதலினை முறைப்படியாக மேற்கொண்டு வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட ரூபா 1,242,924 வாடகை	பாதுக்க கடல் மீன் விற்பனை நிலையத்தின் கடை வாடகையினை	நிலுவையான கடை வாடகையை அறவீடு செய்வதற்கு

	வருமானத்தில் நிலுவையான கடை வாடகை ரூபா 538,900 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை.	அறவீடு செய்வது சம்பந்தமாக உருவாகிய பிரச்சினையை தீர்த்துவைத்ததன் பின்னர் நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	விளம்பர பலகை வருமானத்திற்காக 2024 ஆம் ஆண்டிற்கு ரூபா 1,527,000 வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டில் வருடாநத விலைப்பட்டியலிடல் ரூபா 549,585 ஆகும். அதற்கிணங்க வருடாந்த மதிப்பீட்டு வருமானத்தினை விட வருடாந்த பட்டியலிடப்பட்ட ரூபா 977,415 ஆல் அதாவது 64 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.	விளம்பர பலகைகளிலிருந்து சபையினால் அறவீடு செய்வதற்கான அதிகாரம் உள்ள வருமானத்தை மாத்திரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	விளம்பர பலகை வருமானத்தை சரியாக பட்டியலிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 84,606,603 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 346,615,602 ஆகும்.	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் பணத்தை எதிர்வரும் காலங்களில் பெறறுக்கொள்வதற்கு தேவையான அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.	தேவையான அட்டவணைகளை தயாரித்து நீதிமன்ற தண்டப் பணத்தையும் முத்திரைக் கட்டணத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயறதிற்னின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சந்தை நிலத்திலிருந்து அகற்றப்பட்ட பழுதடைந்த மரக்கறி பகுதிகளை அகற்றுவதற்கு உள்ள உக்குகின்ற கழிவுப் பொருட்களை சேகரிக்கும் இடத்திற்கு அருகாமையில் நீர் சேர்ந்திருந்ததுடன் அந்த நீர் பொது மலசல கூடத்தின் கழிவு நீர் தாங்கியை நோக்கிப் பாய்வதன் காரணமாக அந்த தாங்கியின் மேற்பரப்பு பகுதி	எதிர்வரும் காலங்களில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வாராந்த சந்தையின் வடிகாண் முறைமையினை திருத்தம் செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	துருப்பிடித்து ஆபத்தான நிலையில் காணப்பட்டது. அவ்வாறே சந்தை நிலத்தில் அமைந்துளள மலசல கூடத்திற்கு இணைக்கப்பட்டுள்ள நீர் பாய்ச்சு முறைமையில் நீண்டகாலமாக காணப்படுகின்ற நீர்க் கசிவின் காரணமாக அதனை பயன்படுத்துவதற்கு சிக்கலாக இருந்தது.		
(ஆ)	பிரசித்தப்படுத்தல் விளம்பரங்கள் தொடர்பான உப நியதிச்சட்டத்தின் 04 ஆம் பந்திக்கு இணங்க சபையினால் பிரசித்தப்படுத்தல் விளம்பரங்களிலிருந்து வருமானங்களை உழைத்திருக்காததுடன் 2024 ஆம் ஆண்டிற்கான பிரசித்தப்படுத்தல் விளம்பரங்களுக்காக ரூபா 549,985 வருமானத்தை மாத்திரம் உழைத்திருந்தது. சபையினால் பேணப்படுகின்ற விளம்பர பலகை பதிவேடு முறைப்படியாக பேணப்பட்டிருக்காததுடன் விளம்பரத்தை வெளியிடுவதற்கு அதிகாரப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு வருகை தருகின்ற வியாபாரிகளின் விளம்பரங்கள் மாத்திரம் அந்த பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது.	மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கொடுப்பனவு செய்யத் தவறுகின்ற விளம்பரங்களை கழற்றி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கிறேன்.	விளம்பர பலகை மீளாய்வின் பிரகாரம் வருமானம் சேகரிக்கப்பட வேண்டியதுடன் கொடுப்பனவு செய்யத்தவறிய விளம்பர பலகைளை கழற்றி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சபையின் விளம்பர பலகை பதிவேட்டின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் பதிவுசெய்து 2024 ஆம் ஆண்டில் பணத்தை செலுத்தாத நிரந்தர விளம்பர பலகைகளை மற்றும் தற்காலிக விளம்பர பலகைகள் கழற்றி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.	பணத்தை செலுத்தாத விளம்பர பலகைகளை கழற்றி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பணத்தை செலுத்தாத விளம்பர பலகைகளை கழற்றி அகற்றுதல் வேண்டு.
(ஈ)	மேற்கூறிய உப நியதிச்சட்டத்தின் 21 ஆம் பந்திக்கு இணங்க விளம்பர பலகைகள் எந்தவொரு நகரத்தினதும் கவர்ச்சிக்கு எந்த வகையிலும் அச்சுறுத்தலாக இருக்குமாயின் அந்த விளம்பர்	நிறமாற்றமடைந்த விளம்பர பலகைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய உப நியதிச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தொடர்பான எழுத்து மூல அறிவித்தலினை உரிய உரிமையாளருக்கு ஒப்படைத்து 07 நாட்களுக்குள் தேவைக்கேற்ப சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு இல்லையாயின் சபையினால் அதனை அகற்ற வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிறமாற்றமடைந்துள்ள 10 பிரசித்தப்படுத்தல் விளம்பர பலகைகள் பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.		
(உ)	ஒரு கவர்ச்சிகரமான அழகான சூழலில் அமைந்துள்ள குமாரி கால்வாயை பார்ப்பதற்காக வார இறுதி நாட்களில் 3,000 இற்கு அண்மித்த நபர்கள் வருகை தருகின்றார்கள் என பௌதீக கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. இந்த இடத்தை அபிவிருத்தி செய்து பிரதேச சபையின் கீழ் சுற்றுலா பயணிகளுக்கு டிக்கட் வழங்கி வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கான இயலுமை காணப்பட்டிருந்தும் அதற்காக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.	தேவையான நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு முடியாமையின் அடிப்படையில் இச்செயற்திட்டத்தினை ஆரம்பிக்க முடியாதுள்ளது.	தேவையான ஏற்பாட்டினை சேகரித்து செயற்திட்டத்தினை ஆரம்பித்தல் வேண்டும்.

3.2 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சபையின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	சபையின் நிருவாகத்தின் கீழ் 05 ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் காணப்பட்டிருந்தும் பிரதேச சபைக்கான அங்கீகரித்த ஆளணியினரில் 04 மருத்துவர்கள் உள்ளதுடன் அவற்றில் ஒரு பதவி வெற்றிடமாக காணப்பட்டது. எனவே ஹங்கெல்ல ஆயுர்வேத மருத்துவ நிலையத்திற்கு ஒரு மருத்துவரும் மிகுதியான 04 ஆயுர்வேத மருத்துவ நிலையங்களுக்கு இரண்டு மருத்துவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக அந்த 04 ஆயுர்வேத நிலையங்கள்	வைத்தியசாலைகளின் எண்ணிக்கைக்கு நேரொத்த வகையில் பதவிகளை திருத்தம் செய்வதற்காக காலாண்டு அறிக்கையுடன் பிரதம செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு வேண்டுகோள் விடுத்து அனுப்பிவைக்கப்பட்டுள் ளது.	அங்கீகரித்த மருத்துவர் பதவிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ஒரு வாரத்திற்கு 03 நாட்கள் மாத்திரம் திறந்து காணப்படுகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக அதிகாரப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு பொதுப் பயன்பாட்டு சேவையின் கீழ் சுகாதார சேவை வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு நேரொத்த வகையில் அங்கீகரித்த ஆளணியையும் திருத்தம் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஆ)	அங்கீகரித்த 04 ஆயுர்வேத மருந்து கலவையாளர் பதவிகள், 04 நூலகர் பதவிகள், சுகாதார நிருவாக பதவி, 05 சாரதி பதவிகள் என்பன 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக அப்பதவிகளில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக களப் பணிப்பாளர்களும் நூலக உதவியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	இதுவரை நியமனங்கள் செய்யப்படாத பதவிகளுக்காக ஆட்சேர்பபு செய்யப்பட வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதன ால் இந்த வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு முடியாதுள்ளது.	அத்தியவசியமான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.